# முதற்பதிப்பின் பதிப்புரை

'அணியிலக்கணம்' என்னும் இந்நூல் முதன் முதல் நன்னூற்காண்டிகையுரை இயற்றி வெளியிட்டவரும் வித்துவானும் ஆகிய **திருத்தணிகை - விசாகப்பெருமாளையர்** அவர்கள் இயற்றிய **பாலபோத இலக்கணத்திலுள்ள** அணியிலக்கணப் பகுதியாகும்.

சென்ற ஒருநூறு ஆண்டுகளாக விசாகப்பெருமாளையர் அவர்கள் இயற்றிய யாப்பிலக்கணமும் அணியிலக்கணமும், தமிழ் மாணுக்கராற் பெரிதும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

எம்மால் வெளியிடப்பட்ட யாப்பிலக்கணத்தைக் கண்ணுற்ற ஆசிரியர் பலர் அணியிலக்கணத்தையும் வெளியிடுமாறு வேண்டியதன் பயனுக இந்த அணியிலக்கணம் திருத்தமான முறையில் வெளியிடப்பட்டுள்ளது.

'திருமகள் நிலையம்'
மயிலிட்டி தெற்கு
பிரமாதி – சித்திரை.

நா. பொன்னையா

# நூலாசிரியர் வரலாறு

இந் நூலாசிரியர் விசாகப்பெருமாளையரவர்கள், சென்னைமாநகரத்துக்குப் பக்கத்தேயுள்ள திருத்தணிகையில், கந்தப்பையரவர்களின் சிரேட்ட புத்திரராக, 19 - ம் நூற்றாண்டின் முற்பகுதியிற் பிறந்தார்.

தந்தையாரவர்களிடம் கல்வி கற்றுச் சிறந்த வித்துவானாக விளங்கினார். இவருடன் பிறந்தவராகிய சரவணப்பெருமாளையரவர்களும் சிறந்த வித்துவானவர்.

விசாகப்பெருமாளையரவர்கள் நன்னூல், திருக்குறள், நைடதம், பிரபுலிங்கலீலை முதலிய நூல்கட்கெல்லாஞ் சிறந்த உரையெழுதியுள்ளார்கள்.

இலக்கணங் கற்கும் மாணாக்கர்களின் இடர்ப்பாடொழிதற்பொருட்டுப் பஞ்சலக்கணங்களையுந் தெளிவுபட விளக்கி 'இலக்கணச்சுருக்க வினாவிடை' என்னும் நூலொன்றைச் செய்தார்கள். இங்கு பதிக்கப்பட்ட 'அணியிலக்கணம்' இவ்விலக்கணச் சுருக்க வினாவிடையுள், அணியைப்பற்றிய பகுதியேயாம். பாலபோத விலக்கணம் என்னும் பிறிதோரிலக்கண நூலையும் இவர்கள் இயற்றியுள்ளார்கள்.

## கக. ஒழிப்பணி

அஃதாவது, ஒரு தருமத்தை யாரோபித்தற் பொருட்டு ஒரு தருமத்தை மறுத்தலாம். இதனை வட நூலார் **அபநுதியலங்கார** மென்பர். இவ்வணி அறு வகைப்படும்.

### (1) வெற்ருெழிப்பு

அஃதாவது, உபமான தருமத்தை யாரோபித் தற்கு உபமேய தருமத்தை யொழித்தலாம்.

உ-ம்: "மதியன் றிதுபுகலின் வானதியிற் ருேன்றும்
புதியதொரு வெண்கமலப் பூ."

### (2) காரணவொழிப்பு

அஃதாவது, மேற் சொல்லப்பட்ட ஒழிப்பே காரணத்தோடு கூடி வருதலாம்.

உ-ம்: "பொங்கு வெம்மை பொழிதலி ஞலிது
திங்க ளன்று தினகரன் தானன்று
கங்கு லாதலி ஞற்கட னின்றெழீஇத்
தங்கு றும்வட வைத்தழ லாகுமே."

### (3) வேறுபாட்டொழிப்பு

அஃதாவது, வர்ணியத்தி லாரோபித்தற்பொருட்டு மற்ருெரு பொருளின் தருமத்தை யொழித்தல்.

உ-ம்: "தெரியு மிதுதிங்க ளன்று செழும்பூண்
அரிவைமுக மேதிங்க ளாம்."

இதில், திங்களின் தருமம் அதனிடத்து ஒழிக்கப் பட்டு வர்ணியமாகிய முகத்தில் ஆரோபிக்கப்பட்டது.

பல்பொருட்சொற்றொடரணி 27
பிரிநிலைநவிற்சியணி 68
பிறிதாராய்ச்சியணி 35
பிறிதின்குணம்பெறலணி 59
பிறிதின்குணம்பெருமையணி 60
பிறிதினவிற்சியணி 31
பின்வருவிளக்கணி 20
புகழ்பொருளுவமையணி 4
புனைவிலிபுகழ்ச்சியணி 28
புனைவுளிவிளைவணி 30
பெருமையணி 42
பொதுமையணி 61
பொய்த்தற்குறிப்பணி 53
மடங்குதனவிற்சியணி 66
மயக்கவணி 9
மலர்ச்சியணி 52
மறையாமையணி 61
மறைவணி 60
மற்றதற்காக்கலணி 43
மாலைவிளக்கணி 45
மாற்றுநிலையணி 47
மிகுதிநவிற்சியணி 68
முரண்விளைந்தழிவணி 35
முறையிற்படர்ச்சியணி 46
மேன்மேலுயர்ச்சியணி 46
யுத்தியணி 65
வஞ்சநவிற்சியணி 63
வஞ்சப்பழிப்பணி 33
வஞ்சப்புகழ்ச்சியணி 32
வல்லோர்நவிற்சியணி 65
வனப்புநிலையணி 54
விதியணி 69
வியப்பணி 41
விலக்கணி 68
விளக்கணி 20
விறல்கோளணி 49
வினைமுதல்விளக்கணி 49
வீறுகோளணி 67
வெளிப்படைநவிற்சியணி 64
வேண்டலணி 57
வேற்றுப்பொருள்வைப்பணி 51
வேற்றுமையணி 24

